Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

15 செப்டெம்பர் 2020, கொழும்பு

**வலுவான அந்நியச் செலாவணிப் பங்களிப்பு மற்றும் தெங்குத் தொழிற்துறையை மேம்படுத்துவதற்கான மூலோபாய ஆதரவுக்காக உலகத் தேங்காய்த் தினத்தன்று நெஸ்லே நிறுவனத்திற்கு அரச விருது**

உலகின் மிகப் பெரிய தேங்காய்ப் பால் மா ஏற்றுமதியாளர்களில் ஒருவராக அதன் உயர் அந்நியச் செலாவணிப் பங்களிப்பை இனங்கண்டு அங்கீகரிப்பதற்காகவும், இலங்கையில் தெங்குத் தொழிற்துறையை ஊக்குவிக்க அரசாங்கத்திற்கு வழங்கி வருகின்ற ஆதரவுக்காகவும், உலகத் தேங்காய்த் தினத்தன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு உத்தியோகபூர்வ நிகழ்வில் இலங்கைத் தெங்கு அதிகார சபை அதிகாரிகள் நெஸ்லே நிறுவனத்திற்கு விருது வழங்கியுள்ளனர். நெஸ்லே தனது வணிக முயற்சிகளின் மூலம் 9,000 க்கும் மேற்பட்ட உள்நாட்டுத் தெங்குப் பயிர்ச்செய்கை விவசாயக் குடும்பங்களை ஆதரித்து வருகிறது. பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சரான கௌரவ அருந்திக்க பெர்னாண்டோ, பெருந்தோட்டத்துறை அமைச்சரான கௌரவ வைத்தியர் ரமேஷ் பத்திரண மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் பணிப்பாளர் சபைத் தலைவரான திரு ஜெயந்த விக்ரமசிங்க ஆகியோர் இந்த விருதைக் கூட்டாக வழங்கி வைத்தனர்.

“எங்கள் வணிக முயற்சிகளின் மத்தியில் உள்ள அனைவருக்கும் நாம் ஏற்படுத்தும் நேர்மறையான பலனுக்காகத் தொடர்ந்து அங்கீகரிக்கப்படுவதில் பெருமிதம் கொள்கிறோம். ‘*நல்ல உணவு, நல்ல வாழ்வு*’ கோட்பாட்டுடனான நிறுவனம் என்ற வகையில், எங்கள் தயாரிப்புகள் எங்கள் நுகர்வோருக்குச் சிறந்தவையாக இருப்பது மட்டுமல்லாது, எங்கள் சமூகத்திற்கும் சிறந்தவையாக இருக்க வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். ஏறக்குறைய 800 ஊழியர்களுடன், 1984 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் விற்கப்படும் 90% க்கும் மேற்பட்ட தயாரிப்புகளைக் குருணாகலிலுள்ள அதிநவீன பால் உற்பத்தித் தொழிற்சாலை மூலமாக உள்நாட்டில் நெஸ்லே உற்பத்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதன் வலுவான ஏற்றுமதி வணிகத்துடன் சேர்ந்து இலங்கையின் பொருளாதாரத்திற்கு நாம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளோம். கடந்த 114 ஆண்டுகளாக இலங்கையில் தொடர்ந்து சிறந்த விடயங்களை ஆற்றுவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்,” என்று இவ்விருதை ஏற்றுக்கொண்ட நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஃபேப்ரிஸ் காவலின் அவர்கள் குறிப்பிட்டார்.

நெஸ்லே கிட்டத்தட்ட 35 ஆண்டுகளாக மிகவும் அபிமானம் பெற்ற மெகி தேங்காய்ப் பால் மாவுக்காக இலங்கைத் தேங்காயைக் கொள்வனவு செய்து வந்துள்ளது. இன்று, அதன் உயர்ந்த தரம் மற்றும் சுவை காரணமாக இலங்கையில் முதலிடத்தில் உள்ள தேங்காய்ப் பால் மாவாக மாறியது மட்டுமல்லாமல், உலகின் மிகப்பெரிய தேங்காய்ப் பால் மா ஏற்றுமதியாளர்களுள் ஒன்றாகவும் மாறியுள்ளது. இது தற்போது 50 க்கும் மேற்பட்ட நாடுகளில் கிடைக்கிறது. 2019 ஆம் ஆண்டில், தேங்காய் கொள்முதல் செய்வதற்கு ரூபா 2.6 பில்லியன் தொகையைச் செலுத்தி, 6,000 க்கும் மேற்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு நெஸ்லே பங்களிப்புச் செய்துள்ளது.

நிறுவனம் நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டத்திற்காக தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையுடன் ஒத்துழைத்து வருவதுடன், இதன் மூலமாகத் தேங்காய் முக்கோணப் பிரதேசங்களுக்கு வெளியே பாரம்பரியமற்ற பிரதேசங்களில் தென்னை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மேலும் 3,000 தெங்குப் பயிர்ச்செய்கையாளர்கள் மற்றும் தமது வீட்டு வளவுகளில் தென்னை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவி வருகிறது. வரட்சி மற்றும் பயிர் நோய்கள் காரணமாகத் தேங்காய் உற்பத்தி மற்றும் விநியோகம் பாதிக்கப்படக்கூடியதாக இருப்பதால், வீட்டுத் தேவைகளுக்குப் போதிய அளவில் தேங்காய் கிடைப்பதை அதிகரிக்க உதவுவதே இதன் நோக்கம்.